# அரக்கோணம் நகராட்சி
# 2023–2024 ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

## 1) அமைப்பும் நிர்வாகமும் :–

அரக்கோணம் நகராட்சி 1958ம் ஆண்டு வரையில் ஊராட்சி மன்றமாக இருந்தது. தமிழக அரசின் 29.05.1958ம் தேதிய அரசாணை எண்.1433ல் கண்டுள்ள உத்திரவின்படி 01.10.1958 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாகவும் 29.04.1974ம் தேதிய அரசாணை எண்.852–ன்படி மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், 17.04.1984ஆம் தேதி முதல், முதல் நிலை நகராட்சியாகவும் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1) அரக்கோணம் நகர முழுப்பகுதியும் அம்மனூர், பெருமூச்சி, புளியமங்கலம் முதலிய கிராமங்களில் சில பகுதிகளையும் சேர்க்கப்பட்ட பகுதியுடன் சேர்த்து 9.06 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு ஆகும். இந்நகரம் இரயில்வே என்ஜினியரிங் ஒர்க் ஷாப், சிமெண்ட் கூரை ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை, அடங்கியுள்ள நகரமாகும். தமிழ்நாட்டிலுள்ள இருப்புப் பாதை சந்திப்பு நிலையங்களில் முக்கியமான ஒன்றாகும்.

2) இந்நகர மக்கட் தொகை 1981ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின்படி 59,405 ஆகும். 1991ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 71,928 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 78,395 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் 38810 ஆண்களும், 39585 பெண்களும் ஆவர். அறிக்கையாண்டில் நகராட்சி வரம்பில் எவ்வித மாறுதலும் இல்லை.

3) இந்நகரின் அபிவிருத்தி அரசால் அங்கீகரிக்கப்பட்ட முழுமை திட்டத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முழுமை திட்ட நில உபயோகத்தின் அடிப்படையில் முன்னேற்றங்கள் சீரமைக்கப்பட்டு வருகிறது. அரக்கோணம் நகரம் 13.05 வடக்கு அட்சரேகை மற்றும் 79.43 கிழக்கு தீர்க்க ரேகையிலும் அமைந்து உள்ளது. நகரம் கடல் மட்டத்தில் இருந்து சுமார் 295 அடி மேலே அமைந்துள்ளது.

## 2) நகர் மன்றம்:

இந்நகராட்சி 36 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகர் மன்றத்தில் அனுமதிக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை – 36 ஆகும். இடஒதுக்கீடு விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| பொது | – | 13 |
| ஆதிதிராவிடர் (பொது) | – | 05 |
| ஆதிதிராவிடர் (பெண்) | – | 05 |
| பெண்கள்(பொது) | – | 13 |
| **மொத்தம்** | – | 36 |

## 3) தேர்தல்

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய சட்டபூர்வ ஆணை எண். 5/2022 நாள் 26.01.2022–ன்படி, 19.02.2022 அன்று நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் அரக்கோணம் நகர்மன்றத்திற்கு கீழ்க்கண்டவாறு 36 வார்டு நகரமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

| வார்டு எண். | பெயர் | சார்ந்த கட்சி |
|---|---|---|
| 1 | திரு.ஜி. ராஜன்குமார் | திமுக |
| 2 | திரு. ப. பாபு | அஇஅதிமுக |
| 3 | திரு.கி. சரவணன் | அஇஅதிமுக |
| 4 | திரு.ச. செந்தில்குமார் | திமுக |
| 5 | திருமதி.அ. சாமுண்டீஸ்வரி | திமுக |
| 6 | திரு.ம. பாபு | திமுக |
| 7 | திருமதி.பா. சங்கீதா | திமுக |
| 8 | திருமதி.தி. பிரியதர்ஷினி | திமுக |
| 9 | திரு.ச. பா. மாலின் | திமுக |
| 10 | திருமதி.அ. கலாவதி | திமுக |
| 11 | திருமதி .க. ரேவதி | திமுக |
| 12 | திருமதி.க. ரஷிதா | திமுக |
| 13 | திரு.கோ. மோ. கங்காதரன் | திமுக |
| 14 | திருமதி.அ. சாந்தி | அஇஅதிமுக |
| 15 | திருமதி.தீ.நித்யா | அஇஅதிமுக |
| 16 | திருமதி.பா. லட்சுமி | திமுக |
| 17 | திரு.சி. என். அன்பழகன் | திமுக |
| 18 | திருமதி.ரா.சித்ரா | இந்திய தேசிய காங்கிரஸ் |
| 19 | திருமதி.த.சரோஜா | திமுக |
| 20 | திருமதி.வெ.கோமதி | அஇஅதிமுக |
| 21 | திரு.ம. வடிவேல் வண்ணன் | திமுக |
| 22 | திருமதி.சீ. மல்லிகா | திமுக |
| 23 | திரு. பா. நரசிம்மன் | அஇஅதிமுக |
| 24 | திரு. எஸ். மோகன் ராஜ் | திமுக |
| 25 | திரு. துரை சீனிவாசன் | திமுக |
| 26 | திரு.என்.சிட்டி பாபு | திமுக |
| 27 | திரு.இரா. ஜெரி எ ஜெராட்தாமஸ் | அஇஅதிமுக |
| 28 | திருமதி.சே. ராஜலஷ்மி | மற்றவை |
| 29 | திருமதி.ப. நந்தாதேவி | திமுக |
| 30 | திரு. ச. பிராகாஷ் | திமுக |
| 31 | திருமதி.க. லட்சுமி | மற்றவை |
| 32 | திரு.லோ. ஜெயபால் | திமுக |
| 33 | திருமதி.ச. பரக்கத் | திமுக |
| 34 | திருமதி.ஆ. ரஸியா | திமுக |
| 35 | திரு.வா. காந்திராஜ் | மற்றவை |
| 36 | திருமதி.ஆ. முனீஷ்வரி | அஇஅதிமுக |

I. **நகரமன்றத் தலைவர்**

16–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.பா.லட்சுமி அவர்கள், நகரமன்ற தலைவராக 04.03.2022 அன்று நடைபெற்ற மறைமுகத் தேர்தலில் நகர்மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்.

II. **நகரமன்ற துணைத் தலைவர்**

10–வது வார்டு நகரமன்ற உறுப்பினர் திருமதி.அ.கலாவதி அவர்கள், நகர்மன்ற துணைத் தலைவராக 04.03.2022 அன்று நடைபெற்ற மறைமுகத் தேர்தலில் நகர்மன்ற துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்.

III. **நிலைக் குழுக்கள்**

கடந்த 31.03.2022 அன்று நடைபெற்ற பல்வேறு நகர்மன்ற குழுக்களுக்கான மறைமுகத் தேர்தலில் கீழ்க்கண்டவாறு நகர்மன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

நியமனக் குழு – திரு.S P மாலின், 9–வது வார்டு நகரமன்ற உறுப்பினர்

ஒப்பந்தக் குழு – திருமதி.ப.நந்தா தேவி, 29வது வார்டு நகரமன்ற உறுப்பினர்

வரிமேல்முறையீட்டு குழு :

i) திருமதி T.சரோஜா, 19வது வார்டு நகரமன்ற உறுப்பினர்
ii) திரு. L.ஜெயபால், 32வது வார்டு நகரமன்ற உறுப்பினர்
iii) திரு.G.ராஜன்குமார், 1வது வார்டு நகரமன்ற உறுப்பினர்
iv) திரு.S.செந்தில் குமார், 4வது வார்டு நகரமன்ற உறுப்பினர்

## 4) மன்ற கூட்டங்கள்:

அரக்கோணம் நகராட்சி நகரமன்ற தலைவரால் 01.04.2023 முதல் 31.03.2024 முடிய கீழ் கண்டவாறு நகர மன்ற கூட்டங்கள் நடத்தப்பெற்றுள்ளன.

**மொத்த கூட்டங்கள்மொத்த கூட்டப்பொருள்கள்**

| வ.எண். | கூட்டத்தின் பெயர் | நடத்தப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சாதாரண கூட்டம் | 8 | 135 |
| 2 | அவசரக் கூட்டம் | 2 | 15 |
| 3 | சிறப்பு கூட்டம் | 0 | 0 |
| 4 | நியமனக்குழு கூட்டம் | 3 | 3 |

## 5)அலுவலர்கள்:

அறிக்கை ஆண்டில் பணியாற்றிய அலுவலர்களின் விவரம் பின்வருமாறு :

**அ) ஆணையாளர் :–**

திருமதி .Rலதா 25.11.2021 முதல் 26.06.2023 வரை

திரு மோகன் (S.O) (பொறுப்பு) 26.06.2023 முதல் 4,07,2023 வரை

திருபார்த்தசாரதி, ஆற்காடு ஆணையர், (கூ.பொறுப்பு) 04,07,2023 முதல் 24,07,2023 வரை

திரு.கி.,இரகுராமன் 24.07.2023 (ஒரு நாள் மட்டும்)

காலியிடம் (ஆணையர் மருத்துவ விடுப்பில்) 25.07.2023 முதல் 01.08.2023 வரை

திரு. அருள், திருத்தணி ஆணையர், (கூ.பொறுப்பு) 02,08,2023உமுதல் 18,08,2023 வரை

திரு. கி.,இரகுராமன் 18,08,2023 முதல் தொடர்ந்து அறிக்கையாண்டில் ஆணையராக பணியாற்றி வருகிறார்.

ஆ) பொறியாளர்:–

திரு.A.D ஆசிர்வாதம் 06.08.2020 முதல் 31,05,2023 வரை

திரு மோ. தங்கராஜ் 01.06.2023 முதல் 24,07,2023 வரை

திரு.A.D ஆசிர்வாதம் 24.07.2023 முதல் 01,08,,2023 வரை

திரு. P. செல்வகுமார் , 02.08.2023 முதல் அறிக்கையாண்டில் பொறியாளராக பணியாற்றி வருகிறார்.

இ)மேலாளர்:–

திருமதி. மேகலா மேலாளர், 2.12.2021 முதல் 10.05.2023 வரை

திரு குழந்தை தேவராஜ், கணக்கர் (ம) மேலாளர்(பொ) 11.05. முதல் 23.06.2023 வரை

திரு ஹரிபாபு, கணக்கர் (ம) மேலாளர்(பொ) 26.06.2023 முதல் 05.10.2023 வரை

திரு நாகூர் மீரான் ஒலி, மேலாளர் 06.10.2023 முதல் அறிக்கையாண்டில் பணிபுரிந்து வருகிறார்.

## 6) நிர்வாகம்

அறிக்கை ஆண்டில் அனைத்து பிரிவு பணியாளர்களுக்கு ஊதியமாக ரூ8,29,76,170/– செலவிடப்பட்டது. அறிக்கை ஆண்டில் மேல்முறையீடு செய்யக் கூடிய தண்டனை யாருக்கும் வழங்கப்படவில்லை. அறிக்கை ஆண்டில் அலுவலர்கள் நியமனம் மற்றும் தண்டனை வழங்குவது சம்மந்தப்பட்ட விதிமுறைகள் முறையாக கடைபிடிக்கப்பட்டன.

## 7) அலுவலக கட்டிடம்

இந்நகராட்சி அலுவலக கட்டிடம் தமிழக அரசின் உள்ளாட்சித் துறையின் 14.10.74 தேதிய அரசாணை எண்.2211–ன்படி உத்திரவு பெற்று அரக்கோணம் சரோஜினி தெருவில் தனியார் கட்டிடம் வாங்கப்பட்டு அக்கட்டடத்தில் இயங்கி வந்துள்ளது. பின்னர் அலுவலகக் கட்டிடம் போதுமானதாக இல்லாததால் திருத்தணி ரோட்டில் சர்வே எண்.343/1–ல் 1.25 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலத்தை அலுவலகம் கட்டுவதற்கு நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டு, அலுவலக கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 01.04.95 முதல் தற்போதைய அலுவலகம் இயங்கிவருகிறது. அலுவலக முதல் மாடியில் நகரமன்ற கூடம் ரூ.7.70 லட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டு "டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கார் நகரமன்ற கூடம் " என பெயர் சூட்டப்பட்டு இயங்கிவருகிறது .

## 8) பேருந்து நிலையம்:–

புதிய நகராட்சி பேருந்து நிலையம் கடந்த 1994ஆம் ஆண்டுமுதல் செயல்பட்டுவருகிறது. "B" கிரேடு பேரூந்து நிலையமாக வகைப்படுத்தப்பட்டுள்ள இப்பேரூந்து நிலையத்தில் 26 பேரூந்துகள் நின்று செல்லும் வசதி (Bus Bays) செய்யப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு சுமார் 147 பேருந்துகள் வந்து செல்கின்றன. பேரூந்து நிலையத்தில் தாய்மார்கள் பாலூட்டும் அறை, பயணிகள் தங்குமிடம், குடிநீர் வசதி ஆகிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள 30 கடைகள் மற்றும் ஒரு உணவு விடுதி ஆகியவற்றிலிருந்து குத்தகைத் தொகையாக ஆண்டு ஒன்றிற்கு ரூ.16,88,094/– கிடைப்பதுடன், பேருந்து நிலைய நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிம ஏலத்தின் மூலம் 2023–2024 ஆம் ஆண்டிற்கு ரூ.5,25,500/– வருவாய் கிடைத்துள்ளது.

## 9)வருவாய் பிரிவு

வருவாய் பிரிவில் திரு.ரஜேந்திரன் என்பவர் வருவாய் ஆய்வாளராக 2023-24 அறிக்கையாண்டில் பணிபுரிந் வருகிறார். மேற்படி பிரிவில் 4 வருவாய் உதவியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

**1) சொத்துவரி:**

அறிக்கை ஆண்டில் 2023-2024, சொத்துவரி (காலிமனை வரிஉட்பட), கீழ்க்கண்ட விகிதாச்சாரப்படி வசூலிக்கப்பட்டு வருகிறது.

2023-2024 அரையாண்டு விகிதம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பொதுவரி | : | 10.50% |
| 2. | நூலக வரி | : | 1.25% |
| 3. | தண்ணீர் / சாக்கடை வரி | : | 2.00% |
| 4. | கல்வி வரி | : | 2.50% |
| | | : | 16.25% |

இந்நகராட்சியில் வருவாய் பெருக்க வேண்டும் என்பது இன்றியமையாததாக உள்ளது. புதியதாக கட்டப்பட்ட வீடுகளுக்கு அல்லது கூடுதல் கட்டிடம் கட்டிய வீடுகளுக்கு வழக்கம் போல் வரி விதிப்பு செய்யப்பட்டு வருகிறது. சொத்துவரியின்கீழ் அறிக்கை ஆண்டில் மொத்த வருவாய் ரூ.377.80 லட்சம் ஆகும்.

வரிவிதிப்பு: அறிக்கை ஆண்டில் 181 கட்டிடங்களுக்கு புதியதாக சொத்துவரி விதிக்கப்பட்டது. கடந்த ஆண்டு 110 கட்டிடங்களுக்கு வரிவிதிக்கப்பட்டது. அறிக்கை ஆண்டில் மொத்த வரிவிதிப்புகளின் எண்ணிக்கை 14,515 -ஆக உள்ளது. இதன் மூலம் மொத்த வசூல் தொகை ரூ.608.28 லட்சம் வசூலிக்கப்பட்டு நிலுவையாக உள்ள தொகை ரூ.124,42 லட்சம் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

**2) தொழில் வரி விகிதம்:**

**தொழில் வரி கீழ்கண்ட வீதத்தில் சராசரி அரையாண்டு வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது**

| | | |
|---|---|---|
| 1. | ரூ 21,000 வரை | இல்லை |
| 2. | ரூ 21,001 முதல் 30,000 | 148/- |
| 3. | ரூ 30,001 முதல் 45,000 | 368/- |
| 4. | ரூ 45,001 முதல் 60,000 | 733/- |
| 5. | ரூ 60,001 முதல் 75,000 | 1099/- |
| 6. | ரூ 75,001 அதற்கு மேல் | 1250/- |

3) <u>கேட்பு, வசூல், பாக்கி:</u>

2023–2024 அறிக்கையாண்டில் வரியினங்களில் கீழும் வரி இல்லாத இனங்களின் கீழும் கேட்பு வசூல் பாக்கி முதலியன கீழ்வருமாறு (ரூபாய் லட்சத்தில்)

| வ.எண் | இனம் | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 1. | சொத்துவரி | 733.71 | 609.28 | 124.42 |
| 2. | காலிமனை வரி | 131.77 | 79.76 | 52.01 |
| 3. | தொழில்வரி | 436.85 | 101.98 | 334.87 |
| 4. | வரியில்லா இனம் | 72.71 | 27.80 | 44.91 |
| 5. | குடிநீர் கட்டணம் | 245.67 | 76.61 | 169.06 |
| 6 | சேவை பயனர் கட்டணம் | 59.29 | 42.93 | 16.36 |
| | மொத்தம் | 1680.00 | 938.36 | 741.63 |

நிலுவையில் உள்ள வரியினங்கள் வசூல் செய்ய துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<u>4) கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கான ஆண்டு குத்தகை வரவினங்கள்</u>

இந்நகராட்சி மூலம் கீழ்கண்ட இனங்கள் ஏலம் மூலம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டு வருவாய் பெறப்பட்டுளளது.

| வ.எண். | குத்தகை இனங்கள் | 2023–24 | 2023–24 |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் | ரூ.5,25,500.00 | 5,51,775.00 |
| 2 | ஆடு, மாடு அடிக்கும் தொட்டி | ரூ,55,500.00 | 5,8275.00 |
| 3 | புதிய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் | ரூ.2,06,057.00 | 2,16, 360.00 |

5) <u>நூலக வரி</u>

சொத்துவரியில் கல்வி வரி நீங்கலாக சொத்துவரி கேட்பில் 10 சதவீதம் தனியாக பிரித்து நூலக ஆணை குழுவிற்கு செலுத்தப்பட்டு வருகிறது.

6) <u>வரி விதிப்புகள்</u>

நடப்பு ஆண்டில் சொத்துவரி விதிப்பாக 14,515 வரிவிதிப்புகளும், காலியிட வரி விதிப்பாக 2492 வரிவிதிப்புகளும் தொழில்வரி விதிப்பாக 3378 வரிவிதிப்புகளும் வரியில்லா இனம் வரி விதிப்பாக 379 வரிவிதிப்புகளும் சேவை பயனர் கட்டணமாக 14,438 வரிவிதிப்புகளும் வசூலிக்கப்பட்டு வருகின்றன.

## <u>10) பொறியியல் பிரிவு</u>

<u>சாலைகள், சிறுபாலங்கள், மற்றும் கட்டிடங்கள்</u>

<u>1) சாலைகள் பராமரிப்பு</u>

1) சிமெண்ட் சாலைகள் : 52.007 கி.மீ.

2) தார்சாலைகள் : 17.480 கி.மீ

3) பேவர் பிளாக் : 18.223 கி,மீ

4) மண்சாலைகள் : <u>0.00 கி.மீ</u>

மொத்தம் : <u>87.710 கி.மீ</u>

அரக்கோணம் நகர எல்லைக்குள் கீழ்கண்ட நெடுஞ்சாலைகள் உள்ளது. இச்சாலைகள் யாவும் நெடுஞ்சாலை துறையினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

1) அரக்கோணம் – காஞ்சிபுரம் சாலை

2) அரக்கோணம் – திருத்தணி சாலை

3) அரக்கோணம் – சோளிங்கர் சாலை

4) அரக்கோணம் – ஓச்சேரி சாலை

5) அரக்கோணம் – திருவள்ளூர் சாலை

நெடுஞ்சாலை துறையினரால் சுமார் 11.07 கி.மீ. நீளமுள்ள நெடுஞ்சாலை இந்நகராட்சி எல்லைக்குள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நகர மன்றத்தால் பராமரிக்கப்படும் . சாலைகளின் மொத்த நீளம் 87.710 கி.மீ.ஆகும் .

2) <u>தெருவிளக்கு பராமரிப்பு :</u>

அறிக்கை ஆண்டில் எரிந்த தெருவிளக்குகளின் விவரம் 2023–2024

| | | | |
|---|---|---|---|
| 1) | LED | : | 2053 |
| 3) | குழல் விளக்குகள் | : | 1281 |
| 4) | உயர்மின் கோபுர விளக்கு | : | 25 |
| | மொத்தம் | | 3359 |

தெருவிளக்குகள் அக்டோபர், 2023 முதல் SUIDF திட்டத்தின் மூலம் பராமரிப்பு பணி ஒப்பந்ததாரர் மூலம் பராமரிக்க 10 ஆண்டுகால ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது .

3) <u>திட்டப்பணிகள்</u>

<u>2023–2024ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள்</u>

| வஎண். | திட்டத்தின் பெயர் | பணிகளின் விவரம் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 15–CFC Untied Grant | சாலைகள் அமைத்தல் | 135.00 |
| 2 | School Improvement Grant | 3 பள்ளிகள் (2+2 புதிய வகுப்பறைகள்) | 210.00 |
| 3 | NNT | 2023 – 2024 – 9 பணிகள் | 69.00 |
| 4 | SBM 2.0 | சமுதாயம் கழிப்பறை (4);, பொது கழிப்பிடம் (2), மற்றும் மராமத்து பணிகள் (3) சிறுநீர் கழிப்பிடம்(3) | 190.66 |
| 5 | TURIP | சிமெண்ட் சாலைகள் அமைத்தல் | 162.00 |
| 6 | கல்வி நிதி | 2 பள்ளிகளில் கூடுதல் கட்டடம் | 80,00 |
| 9 | வருவாய் நிதி/குடிநீர் நிதி | குடிநீர் பணிகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு | 72,40 |
| | மொத்தம் | | 919.06 |

**<u>4) குடிநீர் விநியோகம்</u>**

**<u>குழாய் – பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்:</u>**

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான தக்கோலம் தலைமை நீரேற்று நிலையம் மூலம் 3.50 MLD, கல்லாறு தலைமை நீரேற்று நிலையம் மூலம் 1.50 MLD தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அரக்கோணம் திருத்தணி கூட்டு குடிநீர் திட்டம் மூலம் மற்றும் வேலூர் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் 3.40 MLD என மொத்தம் 8.40 MLD குடிநீர் பெறப்பட்டு 92 LPCD ஒரு நாள் விட்டு ஒரு நாள் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**<u>5) பாதாள சாக்கடை</u>**

அரக்கோணம் நகராட்சியில் ரூ.1345 இலட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முழுவதும் நிறைவு பெற்று 31.10.2019 முதல் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் பணி தொடங்கப்பட்டு தற்போது பாதாள சாக்கடை திட்டம் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. இந்நகராட்சிக்கு மொத்தம் 12073 எண்ணிக்கை பாதாள சாக்கடை இணைப்பு வழங்க வேண்டியதில், தற்போது 9962 இணைப்புகள் வழங்கப்பட்டு மீதமுள்ள 2111 இணைப்புகள் வழங்க நடவடிக்கையில் உள்ளது. இப்பணிகள் ,31.10.2024 –க்குள் நிறைவு பெறும் .

## <u>11) பொதுசுகாதாரம்</u>

**<u>1) மருத்துவம் :</u>**

நகராட்சிக்கு சொந்தமான நகர்நல மையங்கள் ஏதும் இல்லை. நகர்நல மையங்கள் பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத் துறை வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டு மேற்படி துறையினரால் பராமரிக்கப்படுகிறது. நகராட்சி பணியாளர்களான 2 மகப்பேறு உதவியாளர்கள் மற்றும் 3 மகப்பேறு ஆயாக்கள் மேற்படி நகர்நல மையங்களில் பணியாற்றி வருகின்றனர். அவர்களின் மாதாந்திர ஊதியம் மற்றும் இதர சலுகைகள் நகராட்சியால் வழங்கப்படுகிறது.

மேலும், இந்நகரில், 100 படுக்கை வசதிகள் கொண்ட அரசு மருத்துவமனை உள்ளது. பெண்களையும், குழந்தைகளையும் கவனிக்க தனி பெண் மருத்துவர் உள்ளார். இரயில்வே துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கென ரயில்வே மருத்துவமனை ஒன்றும் தனியாக பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் நகர் நல அலுவலர் இல்லை. ஒரு துப்புரவு அலுவலர் மற்றும் 2 துப்புரவு ஆய்வாளர்களில் 1 துப்புரவு ஆய்வாளர் பணியாற்றி வருகின்றார்.

2) <u>பிறப்பு,/ இறப்பு மகப்பேறு உதவியும்:</u>

2023–2024 ஆம் அறிக்கை ஆண்டில் நகராட்சியில் பதிவு செய்யப்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கை 254 ஆகும். சென்ற ஆண்டி எண்ணிக்கை 269 ஆகும். மேலும், அரசு மருத்துவமனையில் நிகழும் பிறப்புகள், அரசு மருத்துவமனையிலேயே பொதுசுகாதாரத்துறை சுகாதார ஆய்வர் மூலமாக தனியே பதிவு செய்யப்படுகிறது.

அறிக்கையாண்டில் பதிவான இறப்பு எண்ணிக்கை 465 ஆகும். கடந்த ஆண்டின் எண்ணிக்கை 382 ஆகும்.

**பல்வகை நோய்களும் அதனால் ஏற்பட்ட இழப்புகள் விவரம் கீழ்வருமாறு:**

| | 2020–2021 | 2021–2022 | 2022–2023 | 2023–2024 |
|---|---|---|---|---|
| 1. டைபாயிட் | –– | – | – | – |
| 2. இதர காய்ச்சல்கள் | –– | – | – | – |
| 3. வயிற்றுப்போக்கு | –– | – | – | – |
| 4. சீதபேதி போக்கு | –– | – | – | – |
| 5. காசநோய் | –– | – | – | – |
| 6. இதர நோய் காரணங்கள் | 526 | 549 | 382 | 465 |

அறிக்கையாண்டில் துப்புரவு ஆய்வாளர் மூலம் பிறப்பு இறப்பு பதிவுகளும் இதர வேலைகளும் செய்யப்பட்டது.

அறிக்கையாண்டில் அம்மைநோய் தாக்குதல் ஏதுமில்லை. இந்நோய்கள் பரவாமல் இருக்க தடுப்பு ஊசிகள் அவ்வப்போது போடப்பட்டது. அரசினரால் அனுமதிக்கப்பட்ட கொசு ஒழிப்பு திட்டம் திருப்திகரமாக இயங்கி வருகிறது. அத்திட்டத்தை அமுல் படுத்த ஒரு துப்புரவு ஆய்வர் ஒரு களப்பணி உதவியாளர் பணிபுரிந்து வருகிறார் கொசு ஒழிப்பு திட்டத்தின்கீழ் அறிக்கை ஆண்டில் மான்யம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை..

3 ) **துப்புரவு பாதுகாப்பு**

அறிக்கையாண்டில் நகரின் எல்லா வீதிகளையும், சந்துகளையும், 96 நிரந்தர தூய்மை பணியாளர்கள் மற்றும் வெளிக்கொணர்வு ஒப்பந்த அடிப்படையில் தூய்மை பணியாளர்கள் மூலம் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

4)**திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் மற்றும் கையாளுதல்:**

அரக்கோணம் நகரம் 9.06 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். இது முதல் நிலை நகராட்சியாகும். 2011 ஆம் ஆண்டு கணக்கின்படி மக்கள் தொகை 78,395 ஆகும். தற்போதைய உத்தேச மக்கள் தொகை 92585.

இந்நகராட்சி 36 வார்டுகளைக் கொண்டது ஆகும். இதில் 36 வார்டுகளில் வீடு, வீடாகச்சென்று குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என்று 13 இலகு ரக வாகனம் மற்றும் 29 மின்கல வாகனங்களின் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி நடைபெற்று வருகிறது. 3 நுண்ணுர மையம் மற்றும் 09 பசுமை உர குடில்களில் சேர்க்கப்பட்ட மக்கும் குப்பைகளை கொண்டு இயற்கை முறையில் உரம் தயாரிக்கபடுகிறது.

நகரில் உள்ள அனைத்து கடை உரிமையாளர்களுக்கும், அனைத்து வீடுகளுக்கும், குப்பைகளை வீதியில் போடக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குப்பையில்லா நகரம் கோயிலுக்கு சமம் என்பதை பொதுமக்கள் அனைவரும் உணரவும், உணர்ந்து செயல்படவும் தகுந்த வழிகளை செய்து, திடக்கழிவு மேலாண்மை திட்டம் சிறப்பாக செயல் படுத்த தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஒரு மேற்பார்வையாளர் மற்றும் 8 பரப்புரையாளர்கள் மூலம் பொது மக்களுக்கு சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது

5) தொழில் உரிமம்:

தொழில் உரிமத்தின் கீழ் எல்லா வியாபாரிகளுக்கும் உரிமையாணை இந்த ஆண்டில் வழங்கப்பட்டது. துப்புரவு ஆய்வராலும், துப்புரவு அலுவலராலும் மேற்படி தொழில்கள் நடைபெறும் இடங்கள் பார்வையிட்டு உரிமையாணை கொடுக்கப்பட்டு தகுதியுள்ள எல்லா வியாபாரிகளுக்கும் உரிம ஆணை வழங்கப்பட்டது. பார்வையிடும் போது நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகளை கடுமையாக அமுல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. திருத்திய உபவிதிகளின்படி உரிமம் கட்டணம், வசூல் செய்யப்பட்டது. அறிக்கையாண்டில், தொழில் உரிமத்தின் கீழ் வசூலிக்கப்பட்ட தொகை ரூ2,40,000/– ஆகும்.

6)சந்தை கடைகள்:

விளம்பரப்படுத்தப்பட்ட சந்தைகள், விழாக்கள் இந்நகரில் ஏதுமில்லை. அறிக்கையாண்டில் சந்தைகளும் முக்கிய விழாக்கள் ஏதும் நடைபெறவில்லை. பிரதி மாதம் ரயில்வே தொழிலாளர் ஊதிய நாளன்று ரயில்வே பொறியியல் பணிமனை அருகில் சிறிய மாதாந்திர சந்தை நடத்தப்படுகிறது. இங்கிருந்து சுமார் 13 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள திருத்தணியில் ஆடிகிருத்திகை விழா முன்னிட்டு பக்தர்களுக்கு இந்நகரில் சிறப்பு சுகாதார வசதிகள் வழக்கம் போல் இந்நகராட்சி மூலம் செய்யப்பட்டது.

.

7) கொசு ஒழிப்பு

கொசுஒழிப்பு திட்டத்தின் கீழ் 36 DBC பணியாளர்கள் ஒப்பந்தம் அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். 2023–2024 ஆம் ஆண்டில் இப்பணியாளர்களின் ஊதியத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 10,15,436/– ஆகும்.

8) மலேரியா மற்றும் டெங்கு காய்ச்சல்

இந்நகராட்சியின் 36 வார்டுகளை 3 குழுக்களாக பிரித்து தினந்தோறும் (லார்வா புழு ) கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 10 மலேரியா மஸ்தூர், மலேரியா, டெங்கு காய்ச்சல் நோய் கண்டறிதல் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். மேலும், DBC பணியாளர்கள் 36 பேர் வீடு வீடாக சென்று டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்கின்றனர்.

மேலும், கைதெளிப்பான் மற்றும் லாரி மூலம் புகை தெளிப்பான் இயந்திரம் மூலமாகவும் முதிர்ந்த கொசுக்களை ஒழிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது .

9) பொது நல பாதுகாப்பு (பலவகைப்பட்டவை)

அ) நகரில் ஒரு தீயணைப்பு நிலையம் உள்ளது

ஆ) நவீன எரிவாயு தகன மேடை நகரின் மத்தியில் உள்ளது.

இ) தூய்மை பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதி எதுவுமில்லை. தகுதியான இடம் கிடைத்த பின் குடியிருப்பு வீடுகள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10) இயந்திர சாலைகளும், தொழிற்சாலைகளும்:

இந்நகரில் தென்னிந்திய ரயில்வே பொறியியல் தொழிற்கூடம் மற்றும் ஆஸ்பெஸ்டாஸ், சிமெண்ட் தொழிற்கூடம், தவிர தொழிற்சாலையோ அல்லது வேறு தொழிற்சாலைகளோ இல்லை. தமிழ்நாடு அரசின் தொழிற்பேட்டையில் தனிப்பட்ட நபருக்குரிய தொழிற்சாலைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 11) நகரமைப்பு பிரிவு

2023–2024 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டிட அனுமதி மனுக்கள் வரப்பெற்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

1) 01.04.2023 ஆம் தேதியில் நிலுவை – இல்லை

2) நடப்பாண்டில் வரப்பெற்றவை – 106
3) உரிமம் வழங்கப்பட்டவை – 62
4) உரிமம் மறுக்கப்பட்டவை – 41
5) உரிமம் திருப்ப்பபட்டது – 1
6) 31 . 03 . 2024 –ல் நிலுவை – 2

### வழக்குகள்

அறிக்கையாண்டில் நகராட்சி சம்பந்தப்பட்ட வழக்குகளுக்காக ரூ.3,50,000./– செலவாகியுள்ளது. இந்நகராட்சியில் 2023–2024ம் அறிக்கையாண்டில் இறுதியில் 11 வழக்குகள் நிலுவையில் உள்ளன. வழக்குகளை விரைந்து முடித்திடுமாறு நகராட்சி வழக்கறிஞரை கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாவட்ட நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்றத்திலும் சம்பந்தப்பட்ட வழக்கறிஞருக்கும் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

## 12) கல்வி மற்றும் வசதிகள்:

அரக்கோணம் நகராட்சியின் கீழ் 7 ஆரம்ப பள்ளிகளும் 4 நடுநிலை பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவைகளில் உருது ஆரம்ப பள்ளியும் ஒன்றாகும். நகராட்சியின்கீழ் உயர்நிலைப்பள்ளிகள் ஏதும் இல்லை. கட்டாய துவக்ககல்வி அமுலில் உள்ளது. அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின்கீழ் மதிய உணவு வழங்கப்படுகிறது. 11 பள்ளிகளும் நகராட்சி சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

### முதலமைச்சரின் காலை உணவு திட்டம்

அரக்கோணம் நகராட்சிக்கு சொந்தமான பள்ளிகளுக்கும் ஆதிதிராவிடர் நல திட்ட பள்ளி ஒன்றிற்கும் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் 25.08.2023 தேதி முதல் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் மொத்தம் 670 மாணவ மாணவியர்கள் தினசரி தரமான சிற்றுண்டி வழங்கப்படுகிறது. ஊட்டச்சத்தினை உறுதிசெய்திட அரசு வழங்கியுள்ள நெறிமுறைகளின்படி தினசரி ஒரு சிற்றுண்டி வகைகள் வழங்க சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு தொடர்ந்து இன்று வரை முதலமைச்சரின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது

*புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம்:*

*இந்நகராட்சியில் 11 சத்துணவு மையங்களில் 3 அமைப்பாளரும் 3 சமையலர் மற்றும் 4 சமையல் உதவியாளரும் பணிபுரிகின்றார்கள். 11 பள்ளி சத்துணவு மையங்களிலும் நாள் ஒன்றுக்கு பள்ளிகளுக்கு சத்துணவு பரிமாறப்படுகிறது. அதன் தினசரி பயனாளிகள் எண்ணிக்கை 607 ஆகும்.*

*பள்ளி மையங்களில் பயனாளிகளுக்கு தினம் தோறும் மதிய உணவுடன் முட்டையும், பிரதி செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் பச்சைபயிறு அல்லது கொண்டை கடலையும்,, பிரதி வெள்ளி கிழமைதோறும் உருளைக்கிழங்கும், சேர்த்து வழங்கப்படுகிறது.*

*ஒவ்வொரு மையத்திற்கும் பார்வையாளர் நியமிக்கப்பட்டு மாதத்திற்கு குறைந்தது ஒருமுறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கை பெறப்பட்டு உயர் அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகிறது. மையங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்படுகிறது.*

*இத்திட்டத்திற்கு 2023–2024ஆம் ஆண்டில் ரூ.31,68,030/* மானியமாக *பெறப்பட்டு ரூ.30,95,009/– செலவிடப்பட்டுள்ளது.*

## 14)தணிக்கை:

2023–2024 அறிக்கை ஆண்டில் துவக்கத்தில் 569 தணிக்கை தடைகள் நிலுவையாக இருந்தது. மொத்தமுள்ள தணிக்கை தடையில் 123 தடைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, நிலுவையாக உள்ள மீதம் உள்ள தணிக்கை தடைகள் நிவர்த்தி செய்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## 15)படைவீரர் கொடிநாள் வசூல்

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணையின்படி இந்நகராட்சிக்கு படைவீரர் கொடிநாள் வசூல் திட்டத்தின் கீழ் நிர்ணயம் செய்யப்பட்ட இலக்கு ரூ3,00,000/– ஆகும். மேற்படி இலக்கில், ரூ.1,24,400/– வசூல் செய்யப்பட்டு படைவீரர் கொடிநாள் தலைப்பில் செலுத்தப்பட்டது.

## 16) ஈமச்சடங்கு மான்யம்

இந்நகராட்சி பகுதியில் வசித்து வரும் ஆதிதிராவிட மக்களுக்கு, 2023–2024 ஆம் ஆண்டில் ரூ.5000/– வீதம் 41 பயனாளிகளுக்கு ஈமச்சடங்கு மானியம் ரூ.2,05,000/– வழங்கப்பட்டுள்ளது.

## 17) நிதிநிலைமை

### அ)பொது

இந்த ஆண்டு மொத்த வருமானம் ரூ. 3870.70 இலட்சம் ஆகும். மொத்த செலவு ரூ. 3,602.09 இலட்சம் ஆகும். (தணிக்கை செய்யப்படாத கணக்கீடு)

### ஆ) சாதாரண வருமானங்கள்

மாநில அரசினரால் அறிக்கை ஆண்டில் நகராட்சிக்கு வழங்கிய மாநில நிதிக்குழு மான்யத் தொகை ரூ 1618.86 இலட்சம் ஆகும்.

### இ) கடன்கள்

அறிக்கையாண்டில் கடன்கள் ரூ.142 கோடி நிலுவை உள்ளது.

## 8.பொது

2023–2024 அறிக்கை ஆண்டில், இந்நகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலக பணியாளர்களுக்கென பொதுப்பிரிவு , வருவாய் பிரிவு, நகரமைப்பு பிரிவு, பொறியியல் குடிநீர் விநியோகப் பிரிவு, பொது சுகாதாரப் பிரிவு, உதவி கணினி அமைப்பாளர் மற்றும் பொறியாளர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஊதியம், இதர செலவினம் ரூ. 12,82,72,403/–

| | | |
|---|---|---|
| அ) ஊதியம் சிறப்பு ஊதியம், அகவிலைப்படி, வீட்டு வாடகைப்படி மருத்துவ உதவி தொகை வாகனப்படி, சலவைப்படி சேர்த்து. | : | 82976170 |
| | | 45296233 |
| ஆ) ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் பணிக்கொடை சிறப்பு சேமநல நிதி ஓய்வூதிய நிர்வாக பங்குத் தொகை ஆகிய யாவும் சேர்த்து. | : | |
| ஆக மொத்தம் | : | 128272403 |

1) இடவசதி :

நகராட்சி கட்டடம் கடந்த 1994ல் கட்டப்பட்டுள்ளது. ஆணையர், பொறியர் ஆகியோருக்கு தனி அறைகள் உள்ளன. இருப்பினும் நகரமைப்பு அலுவலர், சுகாதார அலுவலர் ஆகியோருக்கு போதுமான இடவசதியுடன் அறைகள் இல்லை. பொறியல் பிரிவு பணிகளை கையாளவும், பொதுசுகாதார பிரிவு ஆவணங்களை கையாளவும் போதுமான இடவசதி இல்லை. மேலும் பொதுசுகாதார பிரிவு தளவாடப் பொருட்கள், பொறியல் பிரிவு தளவாடப் பொருட்கள் ஆகியவற்றை பாதுகாப்பாக வைக்க பொருள் பாதுகாப்பு அறைகள் போதுமானதாக இல்லை. வருவாய் பிரிவு கணிணி பிரிவில் போதிய இடவசதியின்றி இயங்கி வருகிறது.

அதேபோன்று நகர்மன்ற கூடமும் பார்வையாளர் மாடம், ஊடகவியலாளர்கள் அமர வசதி போன்றவைகள் இல்லாமல் உள்ளது. எனவே, போதிய இடவசதிகளுடன் கூடிய புதிய நவீன அலுவலகம் கட்ட மன்ற கூட்டங்களில் கோரிக்கைகள் எழுப்பப்படுகின்றன. புதிய அலுவலக கட்டடம் கட்ட அரசின் உதவி எதிர்நோக்கப்படுகிறது.

அதேபோன்று, நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளருக்கு என அலுவலர் குடியிருப்பு ஏதும் இல்லை. தற்கால சவால்களை சந்திக்க மேற்படி வசதிகள் உடனடி அவசியம் ஆகும்.

நகராட்சி பள்ளிகள் அனைத்தும் சொந்தக்கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. போதுமான வகுப்பறை வசதிகளுக்காக கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

2)<u>தனிப்பள்ளிகள், பொது நூல் நிலையங்கள்:</u>

கிளை நூல் நிலையம் ஒன்று வேலூர் உள்ளாட்சி நூல் நிலையத்தினரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மற்றும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அரக்கோணம் நகராட்சியல் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>பொது குறிப்புரை</u>

அறிக்கையாண்டில் நிர்வாகம் நல்ல முறையில் இயங்கி வந்தது. நிர்வாகத்தை திறம்பட நடத்த உதவிய நகர் மன்ற தலைவர், நகர் மன்ற துணைதலைவர் ,மன்ற உறுப்பினர்கள் மற்றும்,ஆணையர் மற்றும் அதிகாரிகளுக்கும் ஒத்துழைப்பு தந்த இவ்வலுவலக பணியாளர்கள் ஆகியோருக்கு உளங்கனிந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையர்,

அரக்கோணம் நகராட்சி,

27/8/2024

இடம் : நகராட்சி அலுவலகம்

நாள் : 27.08.2024